[8th December 1961

போடுவதா என்பதைப் பற்றியும், படுக்கைகளை அதிகப்படுத்து வதைப் பற்றியும் சப்-கமிட்டி முடிவுக்கு வந்த பிறகு திருத்தி அமைக்கலாம் என்று சர்க்கார் நினைக்கிறது.

Sri M. S. SELVARAJAN : ஸார், ஜில்லா போர்டுக்குச் சொந்தமான சில ஆஸ்பத்திரிகளில் பேறுகால விடுதியும், வியாதி யஸ்தர்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் அறைகளும், ஜனங்களே உதவி செய்து கட்டி, அவர்கள் அங்குள்ள ஆஸ்பத்திரி களில் தங்கி சிகிச்சை பெறும் வியாதியஸ்தர்களுக்குத் தாங்களே அன்றாடச் செலவுத் தொகைகளைக் கொடுத்துக்கொண்டிருக்கும் அத்தகைய ஆஸ்பத்திரிகளை சர்க்கார் கைக்கு எடுத்துக் கொள்ளு வதில் தடை இருப்பது உண்மைதானா? அரசாங்கமே நேரடி யாக இப்படிப்பட்ட மருத்துவ விடுதிகளில் வியாதியஸ்தர்களுக்கு உணவு சப்ளை செய்தால்தான் அரசாங்கத்தின் கைக்கு மாற்றப் படும் என்ற விதி இருப்பது வாஸ்தவமா? உணவுக்குக்கூட ஜனங்களே உதவிக் கொள்ளும் இத்தகைய ஆஸ்பத்திரிகள் அரசாங்கத்தின் கையில் இருப்பதுதான் சிறந்தது என்று கருதி இவைகளை சர்க்காரின் கைக்கு மாற்றிக்கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : இப்போது இருக் கின்ற விதிப் பிரகாரம் மருந்து கொடுக்கும் நிலயமாக இருந்தால் பஞ்சாயத்து யூனியனில் சேரும். படுக்கை இருந்தால் சர்க்கார் எடுத்துக்கொள்ளவேண்டும். சாப்பாடு கொடுக்கும் விஷயம் பற்றி எனக்குத் தெரியவில்லை. அதன் இண்டர்ப்ரிட்டேஷன் என்ன என்று தெரியவில்லை. படுக்கை இருந்தால் எடுத்துக் கொள்ளவேண்டும் என்றுதான் இருக்கிறது. அதாவது அங்கேயே தங்கியிருந்து சிகிச்சை எடுத்துக்கொள்ளுவதை அரசாங்கமே மேற்கொள்ளவேண்டும் என்று விதி இருக்கிறது. அதுதான்.

State Broadcasting Department

* 2192 Q.—Sri S. M. ANNAMALAI : கனம் பொது மரா 9-00 p.m. மத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மராமத்து இலாகா ஒலிபெருக்கி பிரிவு கலைக்கப்பட்டு விட்டதா?

(இ) அப்படியானால், எத்தனைபேர் வேலை இழந்தனர்?

(உ) அவர்களுக்கு மீண்டும் வேலைதர என்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டன?

The Hon. Sri P. KAKKAN : (அ) Yes, Sir. The State Broadcasting Department has been wound up with effect from 1st September 1961 and the work of installation and maintenance of community radio sets has been taken over by a new organisation called the Panchayat Radio Organisation directly under the control of the additional Development Commissioner. A residuary set up is however, being retained under the P.W.D. for attending to work connected with installation of Public Address System, etc.

8th December 1961]

(இ) & (உ) None have lost their jobs on account of the winding up of the State Broadcasting Department. Most of the staff have been absorbed in the new Panchayat Maintenance Organisation or retained in the residuary set up under the P.W.D. The staff rendered surplus have been allotted to the Industries, Food Production, Technical Education and other branches of Public Works Department.

Sri S. M. ANNAMALAI: அப்படிக் கலைப்பதற்குக் காரணம் என்ன என்பதைச் சொல்ல முடியுமா? பணம் அதிகமாக ஆகிறது என்ற காரணமா? பணம் அதிகமாக ஆகவில்லை என்றால் அதைக் கலைப்பதற்குக் காரணம் என்ன?

The Hon. Sri P. KAKKAN: பப்ளிக் ஒர்க்ஸ் டிபார்ட்மெண்டில் ஏற்கனவே அதிகமாக செலவாகிறது. மேலும் அதிகமாக செலவு ஆகக் கூடாது என்பதற்காகத்தான், இப்பொழுது பஞ்சாயத்து யூனியன்களை அமைத்து அங்கு ரேடியோக்கள் அமைக்கப்பட்டிருப்பது கனம் அங்கத்தினருக்கு நன்றாகத் தெரியும். அவர்கள் இதைப்பற்றி கவனிக்கலாம். அதற்காகத்தான் இப்படிப்பட்ட ஏற்பாடு செய்திருக்கிறோம். அந்தந்த கிராமங்களில் அமைக்கப்பட்டிருக்கிற ரேடியோ செட்டுகள் ஆதைப் பற்றி கவனித்துக் கொள்ளலாம். அதற்காகத்தான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பணம் செலவாவதைப்பற்றி தனிக்கேள்வி கேட்டால் அதற்கு பதில் சொல்லலாம்.

District Headquarters Hospital (Phone system)

* 2193 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN**: கனம் ரெவின்யூ அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

ஜில்லா தலைநகர ஆஸ்பத்திரிகளில் ஒவ்வொரு வார்டிலும் **Internal Phone System** ஏற்படுத்த உத்தேசமுண்டா?

The Hon. Sri M. A. MANICKAVELU: No, Sir.

Sri V. K. KOTHANDARAMAN: இப்பொழுது போதுமான அளவுக்குமேல் அங்கேயெல்லாம் நர்சுகள், டாக்டர்கள், சிப்பந்திகள் வேலை செய்து கொண்டிருப்பதாலும் இப்படிப்பட்ட பெரிய ஆஸ்பத்திரிகளில் அதாவது ஹெட் க்வார்டர்ஸ் ஆஸ்பத்திரிகளில் அடிக்கடி நோயாளிகள் சிகிச்சைக்கு வருவதால் இதுபோன்ற வசதி இருப்பது அவசியமாக இருக்கிறது. மேலும் மேலும் அதிகமாக நோயாளிகள் வரக்கூடிய காரணத்தால் ஆவது இப்படிப்பட்ட போன் சிஸ்டத்தை ஏற்படுத்துவதற்கு மேலும் தீவிரமாக ஆலோசனை செய்து அதை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுமா?

The Hon. Sri M. A. MANICKAVELU: இப்பொழுது அந்த போன் சிஸ்டம் இல்லாமல் அதிக கஷ்டமாக இல்லை. முக்கியமாக